## 2020 ஆகஸ்ட் 20 ஆம் திகதி வியாழக்கிழமை

## ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்ட வைபவம் மற்றும் அலுவலொழுங்கு ஆகியன சம்பந்தமான நிருபம்

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டம் 2020 ஆகஸ்ட் 20 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு ஆரம்பமாகும்.

**பாராளுமன்றத்திற்கு வருதல்:** பாராளுமன்ற உறுப்பினர்கள் மு.ப. 9.00 மணிக்கு பாராளுமன்றத்திற்கு வந்து சேர வேண்டும். துணைவி/ துணைவரோடு வருகின்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் நுழைவாயில் அருகில் இறங்க வேண்டும். மற்ற எல்லா உறுப்பினர்களும் உறுப்பினர் நுழைவாயில் அருகில் இறங்க வேண்டும்.

பாராளுமன்றத்திற்கு வரும்போது உறுப்பினர்களின் வாகனங்கள் பொலிசாரால் அவற்றுக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிறுத்தலிடங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

**நடைமுறை:** பாராளுமன்ற உறுப்பினர்கள், உறுப்பினர்களின் கூடங்களில் நுழைவதுடன் கூட்ட நடப்பெண் மணியோசை அடிக்கும் வரை அங்கு தங்கியிருத்தல் வேண்டும்.

மு.ப. 9.25 மணியிலிருந்து ஐந்து நிமிடங்களுக்கு அடிக்கப்படும் வாக்கழைப்பு மணியோசையுடன் பாராளுமன்ற நடைமுறைகள் ஆரம்பமாகும் போது உறுப்பினர்கள் சபையில் கூடுவர். மு.ப. 9.30 மணிக்கு மணியோசை நின்றதும் படைக்கலச் சேவிதர் செங்கோல் சகிதம் சபையினுட் பிரவேசிப்பார். படைக்கலச் சேவிதர் சபாபீடத்துக்குச் சென்று அதன்கீழ் செங்கோலை வைக்கும் வரை உறுப்பினர்கள் தத்தம் இருப்பிடங்களினின்றும் எழுந்து நிற்க வேண்டும். படைக்கலச் சேவிதர் தமது ஆசனத்தை அடைந்ததன் பின்னர் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் பாராளுமன்றத்தைக் கூட்டும் அதிமேதகு சனாதிபதியின் பிரகடனங்களை வாசிப்பதோடு சபாநாயகரை தேர்ந்தெடுப்பதற்கு முற்படுவார்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 4 இன் படி சபாநாயகர் தெரிவுக்கான நடைமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. சபாநாயகர் பதவிக்கு ஒருவரது பெயரை முன்மொழிய விரும்பும் உறுப்பினரொருவர் தமது உறுப்பினர் இடத்தினின்றும் எழுந்து நிற்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவ்வுறுப்பினரைச் சுட்டிக்காட்டும் பட்சத்தில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 4(ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அவ்வுறுப்பினர் அவரது பிரேரணையை முன்மொழிவார். ஒன்றிற்கும் அதிகமான உறுப்பினர்கள் முன்மொழிதலுக்காக எழுந்து நிற்கும் பட்சத்தில் எவ்வுறுப்பினரை முதலில் அழைப்பதென்பது பற்றி பாராளுமன்றச் செயலாளர் நாயகம் தீர்மானித்து அவ்வுறுப்பினரைச் சுட்டிக்காட்ட அவர் தமது பிரேரணையை முன்மொழிந்து அப்பிரேரணை வழிமொழியப்படும் வரை மற்றைய உறுப்பினர்கள் அவர்களது இருப்பிடங்களில் அமர்ந்திருத்தல் வேண்டும். சபாநாயகர் பதவிக்கு பெயர்களை முன்மொழிதற்கு உத்தேசிக்கும் உறுப்பினர்கள், கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் தமது உத்தேசம் பற்றி பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்குத் தெரியப்படுத்துவது வழமையுடையதும் நடைமுறைக்குப் பெரிதும் உதவியளிப்பதுமாகும்.

சபாநாயகர் வாக்கெடுப்பின் மூலம் தெரிந்தெடுக்கப்பட்டதன் பின்னர் பாராளுமன்றத்தின் விருப்புக்கிணங்க அவர் தம்மை முன்மொழிந்தவராலும் வழிமொழிந்தவராலும் சபாநாயகரது ஆசனத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார். சபாநாயகர் தமது ஆசனத்தையடைந்து அதில் அமர்வதற்கு முன்னர் தம்மைத் தெரிவு செய்தமைக்காக மிகவும் சுருக்கமாக நன்றி தெரிவிப்பார். பின்னர் அவர் தமது ஆசனத்தில் அமர்கையில் படைக்கலச் சேவிதர் சபாபீடத்தின் கீழ் வைக்கப்பட்டிருந்த செங்கோலை எடுத்து அதன்மேல் வைப்பார். அதனைத் தொடர்ந்து சபாநாயகர், செயலாளர் நாயகம் மூலம் தமது பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரையைச் செய்து கொண்டு கையொப்பமிட வைக்கப்பட்டிருக்கும்

புத்தகத்தில் கையொப்பமிட வேண்டும். இக்கட்டத்தில் கட்சித் தலைவர்கள் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டமைக்காக அவருக்கு நல்லாசி கூறுவார்கள். அதன் பின்னர் சபாநாயகர் பாராளுமன்றத்திற்கு மீண்டும் நன்றி தெரிவிப்பார்.

உறுப்பினர்கள் சட்டப்படி பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்ய வேண்டியது அவர்களின் முதல் கடமையென்பதைச் சபாநாயகர் நினைவுறுத்துவார். சபாநாயகரால் உறுப்பினர்களுக்கு பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை செய்விக்கப்படும். இச்சந்தர்ப்பத்தில் சத்தியப் பிரமாணப் பத்திரங்கள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும். உறுப்பினர்கள் பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை செய்த பின்னர் கையொப்பமிடவென வைக்கப்பட்டிருக்கும் புத்தகத்தில் கையொப்பமிட்டு, நிரப்பி கையொப்பமிடப்பட்ட சத்தியப் பிரமாணப் பத்திரங்களைச் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைப்பர்.

சமூகமளித்த சகல உறுப்பினர்களுக்கும் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்வித்த பின்னர் பாராளுமன்றம் பிரதிச் சபாநாயகரையும் குழுக்களின் பிரதித் தவிசாளரையும் தெரிவு செய்வதற்கு முற்படும். பிரதிச் சபாநாயகரதும் குழுக்களின் பிரதித் தவிசாளரதும் தெரிவுமுறை, தெரிவைச் சபாநாயகர் நடாத்துவதைத் தவிர்ந்த மற்றெல்லாவிதத்திலும் சபாநாயகர் தெரிவுமுறையை ஒத்திருக்கும் (பாராளுமன்ற நிலையியற் கட்டளை 6 ஐப் பார்க்கவும்).

அதிமேதகு சனாதிபதி அரசியலமைப்பின் 32(4) மற்றும் 33 ஆம் உறுப்புரைகளின் பிரகாரம் பாராளுமன்றத்தில் உரையாற்றுவார்.

அதன் பின்னர் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படும்.

**தம்மிக தசநாயக்க**

**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்**